31

13 2020

சுருக்கம்

கைத்தறி மற்றும் துணிநூல் - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 06.03.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019 – 31.03.2018 தேதி வரை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகாமல் இருப்பாக உள்ள பட்டு துணிகளின் விற்பனைக்கு 10 விழுக்காடு உச்சவரம்பிற்குட்பட்ட ரூ.500/– சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை

அரசாணை (நிலை) எண். 08

நாள்: 06.01.2020
விகாரி, மார்கழி 21
திருவள்ளுவராண்டு 2050

படிக்கப்பட்டது:–

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 06.03.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.8481/ 2019/ எப்1, நாள் 17.07.2019.

-----

ஆணை :–

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 06.03.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019–ல் , பட்டு கைத்தறி தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கோடும், பட்டு துணி இரகங்களின் விற்பனையினை சந்தையில் அதிகரிக்கும் பொருட்டும், சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019–ல் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, பட்டு இரக துணி வகைகளின் இருப்பினைக் குறைக்கும் வண்ணம், 31.03.2019 தேதி முடிய உற்பத்தி செய்யப்பட்டு நாளது தேதி வரை விற்பனை மேற்கொள்ளப்பட்டது போக, இருப்பாக உள்ள பட்டு இரகங்களின் விற்பனைக்கு மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த உரிய அரசாணை வழங்குமாறு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

- பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், 31.03.2019–ம் தேதி முடிய உற்பத்தி செய்யப்பட்டு நாளது தேதியில் இருப்பில் இருக்கும் பட்டு துணி இரகங்களுக்கு மட்டும் உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கலாம்.

- பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஏற்கனவே இரண்டாண்டு, மூன்றாண்டு, நான்காண்டு மற்றும் ஐந்தாண்டுகளுக்கு மேல் உள்ள பட்டு ரகங்களுக்கு முறையே 35%, 45%, 55% மற்றும் 65% சங்க கழிவு வழங்கி விற்பனை செய்யப்படும் பட்டு ரகங்களுக்கும் 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி மானியத்தினை வழங்கி விற்பனை செய்ய அனுமதி வழங்கலாம்.

- பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் (கோ–ஆப்டெக்ஸ்) 31.03.2019 தேதி வரை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டது போக நாளது தேதியில் நிலுவையில் இருக்கும் பட்டு துணி இரகங்களின் இருப்பினை சம்பந்தப்பட்ட சரக துணை/உதவி இயக்குநர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர் உறுதிசெய்து சான்றினை பெற்று இச்சிறப்பு தள்ளுபடியை வழங்கலாம்.

- மேற்படி 10 சதவீத பட்டு ரகங்களுக்கான சிறப்பு தள்ளுபடி மானியம் 31.3.2019க்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு ரகங்களுக்கு பொருந்தாது. 31.3.2019–க்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு ரகங்களுக்கு ஏற்கனவே நடைமுறையிலுள்ள ரூ.200/– உச்சவரம்புக்குட்பட்ட 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அல்லது ரூ.300/– உச்சவரம்புக்குட்பட்ட 30 விழுக்காடு தள்ளுபடி மானியத் தொகை மட்டுமே வழங்கி விற்பனை மேற்கொள்ளப்படவேண்டும்.

3 கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது:–

- பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்யும் அனைத்து பட்டு இரகங்களுக்கும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள ரூ.200/– உச்சவரம்பிற்கு உட்பட்ட 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் அல்லது ரூ.300/– உச்சவரம்பிற்குட்பட்ட 30 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அவற்றில், பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் ஆகியவற்றில் 2017–18 நிதியாண்டு வரை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு 31.03.2018–ஆம் தேதியில் இருப்பில் இருக்கும் பட்டு துணி இரகங்களின் விற்பனைக்கு மட்டும் 10 விழுக்காடு உச்சவரம்பிற்குட்பட்ட ரூ.500/– சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கப்படவேண்டும்.

- பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் ஏற்கனவே இரண்டாண்டு, மூன்றாண்டு, நான்காண்டு மற்றும் ஐந்தாண்டுகளுக்கு மேல் உள்ள பட்டு ரகங்களுக்கு முறையே 35%, 45%, 55% மற்றும் 65% சங்க கழிவு வழங்கி விற்பனை செய்யப்படும் பட்டு ரகங்களுக்கும் 10 விழுக்காடு உச்சவரம்பிற்குட்பட்ட ரூ.500/– சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கப்படவேண்டும்.

- இச்சிறப்பு தள்ளுபடி மானியத்தினை செயல்படுத்துவது தொடர்பான விரிவான வழிமுறைகள் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் பிறப்பிக்கப்படவேண்டும்.

- இச்சிறப்பு தள்ளுபடி மானியம் நடைமுறைப்படுத்தப்படும் காலத்தில், 31.03.2018 வரை உற்பத்தி செய்யப்பட்டு நாளது தேதியில் நிலுவையில் இருக்கும் பட்டுதுணி இரகங்களின் இருப்பினை சம்மந்தப்பட்ட சரக துணை / உதவி இயக்குநர்கள் உறுதி செய்து சான்றினை பெற்று இச்சிறப்பு தள்ளுபடியை வழங்கலாம்.

- இந்த 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி திட்டம் செயல்படுத்த தேவைப்படும் தொகை. ஏற்கனவே தள்ளுபடி மானியம் தொடர்பான கணக்குத் தலைப்பில் வரவு செலவுத் திட்டம் 2019–20–இல் ஒதுக்கீடு செய்த தொகைக்குட்பட்டு செயல்படுத்துதல் வேண்டும்.

4. மேலே பத்தி 3-இல் ஆணையிடப்பட்டுள்ள தள்ளுபடி மானியம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2851–00. கிராமத்தொழில்களும் சிறுதொழில்களும் –103. கைத்தறி தொழில்கள் மாநிலச் செலவினங்கள் – KL. கைத்தறித் துணிகள் விற்பனை மீது தள்ளுபடி – 11. மானியங்கள் – 02. பொதுவான மானியம்.
(D.P.Code: 2851 00 103 KL 1122)"
IFHRMS (D.P.Code: 2851-00-103-KL-31102)

5. இவ்வாணை, நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.62128/நிதி (தொழில்கள்)/2019. நாள்.23.12.2019–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:–
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்., சென்னை–600 008.
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை–600 018/(பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை–600 018/(பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை–600 009.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–600 001.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர்–III, சென்னை– 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித் (தொழில்கள் /வ.செபொது II) துறை, சென்னை–600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (ஏ1/பி1) துறை, சென்னை–600 009.
இருப்புக்கோப்பு / சுத்த நகல், உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்

10.01.2020